# இத்தாலி, பிரான்ஸ், ஜப்பானுக்கும்

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபாற்பெட்டி எண். 49
போன் 389

மலர் 10
இதழ் 41

National Tamil Daily
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை பங்குனி 9 ஜுல்ஹஜ் 22 புதன்கிழமை (22-3-68)

## அண்ணா விஜயம்

### ஏப்ரல் 15-ல் அமெரிக்க பயணம்

சென்னை, மார்ச் 21
அடுத்த மாதம் 15ந் தேதி தமிழக முதன்மந்திரி திரு. சி. என். அண்ணாதுரை அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் செல்கிறார்.

திரு. அண்ணாதுரை தமது அமெரிக்க விஜயத்தின் போது இத்தாலி, பிரான்ஸ், ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கும் விஜயஞ் செய்வாரென்று தெரிகின்றது.

அமெரிக்காவுக்கு வருகை தரும்படி அமெரிக்க அரசாங்கம் விடுத்த அழைப்பைத் திரு. அண்ணாதுரை ஏற்றுக்கொண்டிருப்பது தெரிந்ததே. அவர் அடுத்த மாதம் 15ந் தேதி தமிழகத்திலிருந்து புறப்பட்டு பம்பாய் சென்று, பம்பாயிலிருந்து, ரோமுக்கும், அங்கிருந்து பிரான்ஸின் தலைநகரான பாரிஸ் நகருக்கும் போய் அங்கிருந்து அமெரிக்காவுக்குச் செல்வார்.

(6-ம் பக்கம் பார்க்க)

# இலங்கை விரைவில் குடியரசு நாடாகும்

## அரசியல் நிர்ணய சபையும் கூட்டப்படும்

## அரசாங்கம் ஆலோசனை

கொழும்பு, வியாழன்

இலங்கையை ஒரு குடியரசு நாடாகப் பிரகடனப் படுத்துவதெனவும் குடியரசான பின்னரும் காமன்வெலத்தில் அங்கம் வகிப்பதெனவும் குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்திய பின் இலங்கைக்குப் பொருத்தமான ஓர் அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கு அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவதென்றும் அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக அறியப்படுகிறது.

இலங்கையை ஒரு குடியரசு நாடாகப் பிரகடனப் படுத்துவதற்கான யோசனையை அடுத்த சிம்மாசனப் பிரசங்கத்தில் அரசாங்கம் வெளியிடுமென்றும் பார்லிமென்டின் அடுத்த கூட்டத் தொடரில் இலங்கையை காமன்வெல்த்திற்குள் உட்பட்ட ஒரு குடியரசு நாடாகப் பிரகடனப் படுத்துவதென்று கோரும் பிரேரணை கொண்டுவரப் படுமென்றும் தெரிகிறது. குடியரசாகப் பிரகடனப் படுத்தும் பிரேரணை நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டுபங்கு வாக்

(6-ம் பக்கம் பார்க்க)

## மதமாற்றத்தை தடுக்க இந்துமாமன்றம் முயற்சி

### தீண்டாமை ஒழிப்புக்கும் நடவடிக்கை

கொழும்பு, வியாழன்
அகில இலங்கை இந்து மாமன்றம் தனது ஆண்டு விழாவை அடுத்த மாதம் யாழ்ப்பாணத்தில் கொண்டாடவிருக்கிறது.

இந்துமாமன்றத்தின் கூட்டம் நேற்று மாலை திரு. எஸ். சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

மன்றத்தின் ஆண்டு விழாவை ஏப்ரல் மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நடத்துவதெனவும் உடல் நலம் குன்றியிருக்கும் மன்றத்தின் தலைவரும் முன்னாள் நீதியரசருமான திரு. பொன். ஸ்ரீஸ்கந்தராசா குணமடையவேண்டுமெனப் பிரார்த்தித்து சிவன்கோவிலில் விசேஷ பூஜை நடத்துவதெனவும் தீர்மானிக்கப் பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஆலய தர்மகர்த்தாக்களைச்சந்தித்து, ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக

(6-ம் பக்கம் பார்க்க)

## சீமெந்து தொழிற்சாலையில் ஒரு 'மில்' உடைந்தது

காங்கேசன்துறை, வியா.
காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் சிமெந்து உற்பத்தி செய்யும் இரண்டு [ஆலை] 'மில்'களில் ஒன்று உடைந்துவிட்டதாகவும் இதனால் சிமெந்து உற்பத்தி 50 சதவிகிதமளவில் குறைந்துவிட்டதாகவும் அறியப்படுகிறது.

இப்போது ஒரு நாளைக்கு 240 தொன் சிமெந்துமட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது.

ஒரு மில் உடைந்துவிட்டதால் இன்னும் ஒரிரு மாதங்கள்வரை சிமெந்துஉற்பத்தி பாதிக்கப்படுமென்றும் நாட்டில் சிமெந்துத் தட்டுப்பாடு மேலும் அதிகரிக்கலாமென்றும் அஞ்சப்படுகிறது. 'மில்' உடைந்தது பற்றி ஆராய்ந்து அறிவதற்காகவும் அடுத்து என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமெனத் தீர்மானிப்பதற்காகவும் சிமெந்துக் கூட்டுத்தாபன பொதுமுகாமையாளர் டாக்டர் பேரம்பலம் சிமெந்துத் தொழிற்சாலைக்கு விஜயம் செய்துள்ளார்.

## இஸ்ரேல் - ஜோர்தான் துருப்புகள் கடும் மோதல்

### 15 ஆயிரம் இஸ்ரேலியர் ஜோர்தானுக்குள் புகுந்தனர்

அம்மான், மார்ச் 21

ஜோர்தானுக்குள், செங்கடலுக்கு மேற்கிலும், வடக்கிலும் இஸ்ரேல் துருப்புகளுக்கும் ஜோர்தான் துருப்புக்களுககுமிடையில் கடும் போர் நடந்துகொண்டிருக்கிறது.

இன்று காலை 15 ஆயிரம் இஸ்ரேலியத் துருப்புக்கள் ஜோர்தானுக்குள் புகுந்ததைத் தொடர்ந்து இந்தக் கடும் போர் ஆரம்பமாகியது. ஜோர்தானில் பல எல்லை முகாம்கள் வீழ்ந்துவிட்டதாகவும், முக்கிய அரபுத் தலைவர்கள் பலர் கொல்லப்பட்டதாகவும் செய்திகள் கிடைத்துள்ளன.

இஸ்ரேல் துருப்புகள், இன்று அதிகாலை, இஸ்ரேல்—ஜோர்தான் போர் நிறுத்தக்கோட்டைத் தாண்டி ஜோர்தானுக்குள் புகுந்து, எல்லையிலுள்ள அரபுக் கொரில்லாக்கள்மீது போர் தொடுத்தன.

இஸ்ரேல் துருப்புகள், டாங்கிகள், இயந்திரத் துப்பாக்கிகள் சகிதம், ஜோர்தான் ஆற்றைக் கடந்து அந்நாட்டின் சில பகுதிகளில் தாக்குதல் நடாத்தியுள்ளன.

இஸ்ரேலின் டாங்கிகள் நான்கை அழித்துள்ளதாக ஜோர்தான் செய்திகள் தெரிவிக்கின்றன.

நியூயோர்க்கில். ஐ. நா. சபையின் ஜோர்தான் பிரதிநிதி, ஜோர்தான்மீது முழுப் போர் ஒன்றுக்கு இஸ்ரேல் ஆயத்தமாகியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

### அரிசிக்கப்பல்

காங்கேசன்துறை, வியா.
நாலாயிரத்து ஐந்நூற்று இருபத்தொரு தொன் அரிசியுடன் 'வயோறிற்ரு' என்ற கப்பல் நாளை யாழ்ப்பாணம் துறைமுகத்துக்கு வந்துசேரவிருக்கிறது. [illegible] கப்பல் இப்பொழுது யாழ்ப்பாணத்தில் நிற்கிறது.

பருத்தித்துறை, உடுப்பிட்டி தொகுதி
மக்களின் வசதிக்காக
பருத்தித்துறை பட்டினசந்தைக்கருகாமையில்
யாழ்ப்பாண
ஐக்கிய வியாபாரச் சங்க
முகாமையாளர்
ஒரு கிளை வியாபார நிலையத்தை 24-3-68
திகதியன்று ஸ்தாபிக்கின்றனர்
மேலும்
சாவகச்சேரி, சுன்னாகம், கிளிநொச்சிப்
பட்டினங்களிலும்
இம்மாதிரி கிளை ஸ்தாபனங்கள் மக்களுக்குச்
சேவை செய்வதை இத்தருணத்தில்
மகிழ்ச்சியுடன் நினைவூட்டுகிறோம்.

## மரண அறிவித்தல்

சங்கானை எஸ். கே. விமலதாசன் [காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை வேலைப்பகுதி சுப்ரின்டன்] காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற எஸ். எஸ். கந்தையாவினதும், திருமதி கந்தையாவினதும் அருமை மகனும், புத்மதேவியின் அன்புக் கணவரும், அரவிந்தன், நந்தலால், ஆகியோரின் தகப்பனும், யாழ் தொழில் நுட்பக் கல்லூரி திரு. எஸ். கே. மதியாபரணத்தின் சகோதரரும், ஓய்வுபெற்ற ஓவசியர், [மொனராகலை] திரு வி. செல்லத்துரையினதும், திருமதி செல்லத்துரையினதும், மருமகனும், ஜெயப்பிரகாஷ், செல்வராஜன், ரஜினி ஆகியோரின் மைத்துனருமாவார். ஈமக்கிரியைகள் இன்று [22-3-68] மாலை 4 மணிக்கு சங்கானையில் நடைபெறும்.

178

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நிகழ்காலத்தைப் பற்றியே எண்ணுங்கள். இறந்த காலத்தைப்பற்றியோ எதிர் காலத்தைப்பற்றியோ சிந்தித்துக் கொண்டிராதீர்கள். அப்பொழுதுதான் நீங்கள் உண்மையில் மகிழ்ச்சியுடன் இருக்கலாம். நீங்கள் நீண்ட கால வாழ்வு வாழவும் இதுவே உதவும்.

— சுவாமிசிவானந்தர்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் பங்குனி மாதம் 9ம் திகதி [22-3-68]

## வேலை நிறுத்தம்

வேலைநிறுத்தம் என்ற ஆபத்தான தொற்று நோய் மீண்டும் இங்கு பரவத் தொடங்கியிருக்கிறது. இதற்கு உடனடியாகப் பரிகாரம் தேட வேண்டியது அரசாங்கத்தின் கடமை மட்டுமல்ல தொழிற்சங்கங்களினதும் நிர்வாகிகளினதும் கடமையுமாகும்.

திருக்கோணமலைத் துறைமுகத்திலும் கொழும்புத் துறைமுகத்திலும் வேலைநிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வைத்திய ஆய்வுகூட தொழில்நுட்ப ஊழியரின் வேலைநிறுத்தம் நீடிக்கிறது. கடல் கடந்த தந்திச் சேவை ஊழியர்களும் வேலை நிறுத்தம் செய்யத் தீர்மானித்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. 'கருங்காலிகள்' எனத் தாங்கள் கருதும் திருமலைத் துறைமுகத்தில் வேலைக்குச் சேர்ந்திருக்கும் 23 ஊழியர்களை வேலையிலிருந்து நீக்க கூட்டுத்தாபனம் முன்வராவிட்டால் இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கம் பொதுவேலை நிறுத்தம் ஒன்றை ஆரம்பிக்கவிருக்கிறதாம். இது பற்றி வர்த்தக சிப்பந்திகள் சங்கம் முதலாளிமார் சம்மேளனத்துக்கும் அறிவித்திருக்கிறது. அதாவது திருக்கோணமலைத் துறைமுகத்தில் வேலை செய்யும் 23 ஊழியர்களை வேலைநீக்கம் செய்ய வேண்டுமென்று அங்கு வேலை செய்யும் மற்றும் சில ஊழியர்களும் கொழும்புத் துறைமுகத்தில் வேலை செய்யும் சில ஊழியர்களும் கோரிக்கை விடுத்து அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக வேலைநிறுத்தம் செய்கின்றனர். இக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக தனியார் துறைகளிலும் கூட்டுத்தாபனங்களிலும் பணியாற்றும் இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்க ஊழியர்கள் பொது வேலைநிறுத்தம் செய்யத் திட்டமிட்டுள்ளனர்.

துறைமுகக் கூட்டுஸ்தாபனத்துக்கும் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்துக்கும் தகராறு இருந்தால் அதை இருதரப்பினரும் பேச்சு வார்த்தைமூலம் தீர்த்துக் கொள்ள முயற்சி செய்திருக்க வேண்டும். இந்த முயற்சியும் வெற்றியளிக்காது போயிருப்பின் துறைமுக ஊழியர் அடையாள வேலைநிறுத்தம் செய்து தங்கள் கோரிக்கையையும் அதன் நியாயத்தையும் உணர்த்தியிருக்கலாம். இதை விடுத்து இந்தத் தொழிற் சங்கத்துடன் தகராறு எதுவுமில்லாது தனியார் துறையிலும் கூட்டுத்தாபனங்களிலும் பொது வேலை நிறுத்தம் செய்வது நியாயமாகுமா?

தொழிலாளருக்குக் குறைகள் இல்லையென்று நாம் கூறவில்லை. அவர்களுடைய கோரிக்கைகளில் நியாயமில்லையென்றும் நாம் கூறவில்லை. ஆனால் லட்சக்கணக்கான மக்கள் அதிலும் இளைஞர்கள் வேலையின்றி இருக்கிறார்களென்பதையும் அவர்கள் படும் துன்பத்தையும் வேலையிலிருப்பவர்கள் சிறிது சிந்தித்துப்பார்ப்பது நல்லதல்லவா?

நாட்டின் இன்றைய நிலையையும் வாழ்க்கைச் செலவு உயர்வினால் பொதுமக்கள் படும் கஷ்டங்களையும் வேலை நிறுத்தம் செய்வதற்கு முன் தொழிற்சங்கங்கள் சிந்தித்துப்பார்ப்பதும் நல்லது. தொழிலாளரும், தொழிற்சங்கங்களும் வேலைநிறுத்தம் செய்வதற்கு எண்ணதான் நியாயமிருப்பினும் நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடியை உணர்ந்து வேலை நிறுத்தத்தை எவ்வளவு தூரம் தவிர்க்க முடியுமோ அவ்வளவுக்கு இந்த ஊழியருக்கு மக்களின் அனுதாபமும் ஆதரவும் கிடைக்கும் என்பது நிச்சயம்.

# "எழுத்தாளன் நிஜஉலகில் வாழவேண்டியவன்"

## 'வெள்ளரி வண்டி' நூல் வெளியீட்டு விழாவில்கருத்து

யாழ்ப்பாணம், வெள்ளி

"இலங்கையில் வெளியிடப்படும் நூல்களை விற்பனை செய்து எழுத்தாளர்களுக்கு ஆக்கந்தர நல்ல விற்பனை நிலையம் தேவை. காரணம் இன்று வெளியிடப்படும் நூல்களை எழுத்தாளர்களே சுமந்து திரிந்து விற்கவேண்டிய அவல நிலைக்குள்ளாகியுள்ளனர். அப்படி அவர்கள் விற்றாலும் முழுப் பிரதிகளையும் விற்க முடிவதில்லை அச்சிட்ட பிரதிகளிற்பெரும் பாலானவற்றை வீட்டு அலுமாரியில் அடுக்கி வைக்க வேண்டியவராயுள்ளனர்."

இவ்வாறு புதன் கிழமை மாலை யாழ்ப்பாணம் வைதீஸ்வராவித்தியாலய மண்டபத்தில் எழுத்தாளர் திரு. பொ. சண்முகநாதனின் "வெள்ளரிவண்டி" என்ற சிறுகதைத் தொகுதியை வெளியிட்டு வைத்த திரு. சிற்பி [சரவணபவான்] கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இந்தியாவில் வெளியிடப்படும் நூல்களுக்கு அரசாங்க ஆதரவுண்டு. உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளூர் வாசிகசாலை ஆகியனவற்றிற்கு சிபார்சு செய்யப்படுவதனால் நூல்கள் விற்பனையாகின்றன. இந்த விதமாக ஈழத்திலும் அரசாங்க ஆதரவு கிடைக்குமானால் நல்ல நூல்கள் தோன்றுவதற்கு வாய்ப்புண்டாகும்." என்றார்.

இக் கூட்டத்திற்கு திரு. தேவன் யாழ்ப்பாணம் தலைமைதாங்கினார் தலைமையுரையில் திரு. தேவன் கூறியதாவது:—

"எழுத்தாளன் வாழ்க்கையை உற்று நோக்காமல் இலக்கியம்படைக்கமுடியாது. நம்மைச் சுற்றியுள்ளவர்களின் இன்பதுன்பஉணர்ச்சிகளுடன் உறவாடுகின்ற மன நிலை உதயமானால்தான் நல்ல ஆக்கங்களைச் செய்ய முடியும். கண்ணை மூடிக் கொண்டு கற்பனைகள் சில உண்மையாகவும் உண்மைகள் சில கற்பனையாகவும் மாறி விடுகின்றன.

### நிஜ உலகில் வாழவேண்டியவன்

திரு. க. கணேசலிங்கம் பேசுகையில் "எழுத்தாளன் கற்பனை உலகில் சஞ்சரிப்பவனானாலும் நிஜ உலகில் வாழவேண்டியவன் என்பதை நம்மிற் பலர் மறந்து விடுகின்றனர். இந்த நிலைமாறி நிஜ வாழ்க்கையில் எழுத்தாளன் வாழ வேண்டும்" என்றார்.

திருமதி குறமகள் பேசுகையில், "இலக்கிய வாழ்வின் ஜீவனாடி வாழ்வு எவ்வாறு அமையவேண்டுமென்பதை அறிவுநூல்கள் மிக அழகாகப் பேசுகின்றன. ஆனால் இலக்கிய நூல்கள் அவற்றைச் சுருக்கமாகக் கலைத்துவ அழகுடன் சுட்டிக் காட்டுகின்றன. இலட்சியமற்ற வாழ்வு வாழ்வாகாது. இலட்சியம் எதுவெனக் காட்டி மனித சமுதாயத்தை இயக்குகின்ற தன்மை இலக்கியத்திற்கு உரியதாக அமையவேண்டும்" என்றார்.

வெளியீட்டாளர் திரு. சிவபாதம் வரவேற்புரை நிகழ்த்தினார் திரு. செல்லத்தம்பி ஆசியுரை வழங்கினார். திரு. துரைரத்தினம் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். இறுதியில் திரு பொ சண்முகநாதன் நன்றியுரை கூறினார். [நி.]

## இன்றைய பலன்

[22-3-68]

வெள்ளிக்கிழமை

[பங்குனி மீ 9 உ]

திதி- அட்டமி காலை 7-52 மேல் நவமி

நட்சத்திரம்- பூராடம்

ராகுகாலம்- 10-47-12-17

சுபநேரம்- 6-17—7-47

இன்று பிறந்தவர்களுக்கு— விவேகிகளுக்கு இவ்வாண்டு விளையாட்டுக்களம், நிதானபுத்தியுடன் நடந்தால் நல்ல முன்னேற்றமுண்டு. பொறியியலாளருக்குப் புதிய உற்சாகம் பிறக்கும். மாணவர்களாயின் கல்விநலத்துக்கிடமுண்டு தனிவழிப்பயணத்தைத் தவிர்க்கவும். குடும்பஸ்தர்களுக்கு சில தொல்லைகள் தோன்றிமறையும். விளையாட்டு வீரர்களாயின் விபத்துக்களுக்கு இடமுண்டு. அபாய காரியங்களைத் தவிர்க்கவும்.

மேஷம்- கடமையில் சபாஷ்! காரியசித்தி.

ரிஷபம்- அன்னிய வாசம், அகாலபோசனம்.

மிதுனம் ஒன்றுபட்ட உள்ளங்கள் உறவாடி மகிழும்.

கடகம்- கவலையின் பின்னல், பகைமூட்டம்.

சிம்மம்- பாக்கியவிருத்தி பாசவுணர்ச்சி.

கன்னி- வணிகத்துறையில் வகையான நால் வசதிகள் பெருகும்.

துலாம் வசதியான வாழ்வு, வழியும் பிறக்கும்.

விருச்சிகம்- தாமத மிகுதி, குமைச்சல அதிகம்.

தனுசு- நலிவுக்கு இடமுண்டு, நாவடக்கம் நன்று.

மகரம் திடீர் திருப்பம், திரவிய லாபம்.

கும்பம்- உள்வீட்டில் பூசல், உபத்திரவமிகுதி.

மீனம்- மாதுருவழி மகிழ்ச்சி, மாாணபுடன வாழ்தல்.

—சோதிடக்கலாநிதி—

## 3,000 பேருக்கு திருமணம் நடந்தது

கொழும்பு, வியாழன்

3,000 பேருக்கு சட்டப்படி பதிவுத் திருமணம் நடந்தது. இவர்கள் ஒன்றாகக் குடும்பம் நடாத்திய போதிலும், சட்டப்படி பதிவுத் திருமணம் செய்து கொள்ளவில்லை. கண்டியில் 500 பேரும், கோலையில் 480 பேரும், அநுராதபுரத்தில் 360 பேரும், மாத்தளையில் 325 பேரும் இப்படியாகப் பதிவுத் திருமணம் செய்து கொண்டவர்களாவர்.

மரண தண்டனை விதிக்கப்பட்டு சாவை எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் சிறைக் கைதி ஒருவருக்கு, சிறையிலிருந்து சில மணி நேரங்கள் விடுவிக்கப்பட்டு தனது மனைவியை பதிவுத் திருமணம் செய்து கொண்டு பின்னர் மீண்டும் சிறைக்குள் அனுமதிக்கப்பட்டார்.

## 1-ம் எதிரிக்கு 6 வருட கடூழியம்

மட்டக்களப்பு, வியா.

களுவாஞ்சிக்குடி கராஜ் கொலைவழக்கில் எதிரிகள் கைமோசக் குற்றத்தை ஒப்புக்கொண்டார்கள். இதைத் தொடர்ந்து 1ம் எதிரியான சோமசுந்தரத்திற்கு 6 வருட கடுங்காவல் தண்டனையும், 2ம் எதிரியான கந்தையா இராசமாணிக்கத்திற்கு 750 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கில் களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த கார்த்திகேசு மாணிக்கம் என்பவரை, களுவாஞ்சிக்குடியிலுள்ள கராஜ் ஒன்றின் முன்னால் வைத்து இரும்புக் கம்பியால் அடித்துக் கொன்றதாக அதே இடத்தைச் சேர்ந்த கந்தையா சோமசுந்தரம், கந்தையா இராசமாணிக்கம் ஆகிய இரு சகோதரர்கள்மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

[5-ம் கலத்தொடர்ச்சி]

மோட்டு வேதாந்தமாகப் படலாம். ஆனால்சற்றே சிந்தித்துப்பார்த்தால் இவ்வுலகம் ஆரம்பித்த காலம் முதல் ஏதோ ஒரு நியதியின் படி—மனித வல்லமைக்கு அப்பாற்பட்ட ஒரு நியதியின்படி — எல்லாம் ஒழுங்காக நடந்துவருவதை நாம் காணமுடிகிறதல்லவா?

விஞ்ஞானமும் வைத்தியமும் எவ்வளவுதான் முன்னேறியபோதிலும் மனிதனால் பூகம்பத்தை தடுக்க முடிகிறதா? வெள்ளப் பெருக்கை தடுக்க முடிகிறதா? கொள்ளை நோயை தடுக்கமுடிகிறதா? காரணமில்லாமல் யுத்தங்கள் தொடுத்து கோடிக்கணக்கானவர்களின் உயிரை மாய்க்கும்மனிதனின் காட்டுமிராண்டித்தனத்தை தடுக்க முடிகிறதா?

ஜனத்தொகையை கட்டுப்படுத்தும் ஓர் இயற்கை நியதியன்றோஇவையெல்லாவற்றிற்கும் மூலகாரணமாயிருக்கிறது?

—வழிப்போக்கன்

## நாட்டிலும் நகரிலும்

நிமிடத்திற்கு 225 ஜீவன்கள் பூவுலகத்துக்கு வந்து சேருகின்றன. ஆனால் 93 ஜீவன்களே சிவலோகத்துக்கு (அல்லது யம லோகத்துக்கோ?) போய்ச் சேருகின்றன.

அதாவது, ஒவ்வொரு நிமிடமும் 132 ஜீவன்கள் இந் நிலவுலகத்தில அதிகமாகிக் கொண்டு வருகின்றன.

இந்த ரீதியில் பார்த்தால் கி. பி. 2000 ஆண்டில் உலக ஜனத் தொகை 700 கோடிக்கு மேற்பட்டு விடும். தற்சமயம் உலகில் வாழும் ஜீவன்களின் தொகை சுமார் 340 கோடியே தான்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் வெளியிட்டுள்ள ஓர் உத்தியோக அறிக்கை இத் திகைப்பூட்டும் தகவல்களைத் தருகிறது.

மேலும் பல ருசிகரமான புள்ளி விபரங்களை இவ்வறிக்கை வெளியிட்டுள்ளது.

உலக ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் 15 வயதுக்குட்பட்டவர்கள்.

உலக ஜனத்தொகையில் கிட்டத்தட்ட 59 வீதம் [அதாவது அரைவாசிக்கு மேல்] இந்தியா, ரஷ்யா, அமெரிக்கா, பாகிஸ்தான் இந்தோனேஷியா, ஜப்பான், சீனா ஆகிய ஏழு நாடுகளிலும் வாழ்கின்றனர்.

உலகத்து நாடுகளை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். முதற் பிரிவில் நல்ல உணவு போஷாக்கும், செல்வமும், படிப்பறிவும் நிறைந்த மானிடர் வாழ்கின்றனர். இரண்டாவது பிரிவு இதற்கு நேர்மாறானது. இங்கே உணவுப் பற்றாக்குறையும், தரித்திரமும், நோயும், படிப்பின்மையும் நிலவுகிறது.

ஆனால், என்ன ஆச்சரியம்!

உலக ஜனத்தொகையில் மூன்றில் ஒருபங்கு மட்டுமே முதலாவது பிரிவிலும் மற்ற இரு பங்கு இரண்டாவது பிரிவிலும் வாழ்கிறது.

அதைவிட ஆச்சரியம், கீழ்த்தர நாடுகள் என்று கருதப்படும் இரண்டாம் பிரிவு நாடுகளில் தான் ஜன உற்பத்தி பெருக்கம் அதிகமானதாம்!

இதில் உண்மையில் ஆச்சரியம் ஒன்றும் பிரமாதமாகஇல்லை. ஏனென்றால் நமது நாட்டை எடுத்துக்கொண்டாலும், பாருங்கள், வாழ்க்கைவசதிகள் நிறைந்துள்ள குடும்பங்களிலும் பார்க்க வசதிகள் அதிகமில்லாத ஏழைக் குடும்பங்களில் தான் உற்பத்திவிகிதம் அதிகமாகக் காணப்படுகிறது.

பண வசதியுள்ளவர்கள் கல்வியறிவுபடைத்தவர்கள் என்பது ஒருபுறமிருக்க அவர்களுக்கு கிளப், கலைக் கண்காட்சிகள், சமூகக் கொண்டாட்டங்கள் என்று பலவிதமான பொழுது போக்குகள் உண்டு. ஏழை மக்களுக்கோ அவ்விதமான வசதிகள் எதுவுமில்லை. அவர்களுண்டு, அவர்கள் குடும்பமுண்டு. பகல் முழுவதும் வேலைசெய்து களைத்துப்போய் வந்து அவர்களுடைய பொழுதுபோக்கெல்லாம் தங்கள் சொந்த வீடுகளில்தான்.

இது ஒருபுறமிருக்க பெருகிக்கொண்டே போகும் ஜனத்தொகையை தடுத்து நிறுத்துவதெப்படி, இத்தனை ஜீவன்களுக்கும் உணவு அளிப்பதெப்படி என்றெல்லாம் உலகத் தலைவர்கள் கவலைப்படுவது இயற்கையே இவர்கள் கவலைப்பட்டு என்னவது?

படைத்தவன் ஒருவன் இருக்கின்றான், அவன் எப்படியாவது படி அளப்பான் என்ற ஒரு பழைய வேதாந்தம் எம்மிடையே நிலவுகிறதல்லவா? இது சிலருக்கு

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொடீஷியா மீது பூரண வர்த்தகத்தடை விதிக்க வேண்டும்

## பந்தோபஸ்து சபையில் இந்தியா கோரிக்கை

நியூயோர்க், மார்ச் 21

ரொடீஷியா மீது பூரணமாக வர்த்தகத்தடை விதிக்கப்பட வேண்டுமென இந்தியா, ஐ. நா. பந்தோபஸ்து சபையைக்கேட்டுக் கொண்டுள்ளது

நேற்றிரவு பந்தோபஸ்து சபைக் கூட்டத்தில் பேசுகையில், இந்திய பிரதிநிதி திரு. பார்த்தசாரதி இக்கோரிக்கையை வலியுறுத்தினார்.

ரொடீஷியாவுக்கெதிராக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் யாவற்றையும் எடுக்குமாறு அவர் பிரிட்டனையும் கேட்டுக்கொண்டார். பலாத்காரப் பிரயோகம், இந்த நடவடிக்கைகளுக்கு விதிவிலக்கல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

### எச்சரிக்கை

ரொடீஷியாவின் இனவெறி நடவடிக்கைகளுக்கு எதிராகச் சபை, தன்னிடமுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தித் தடை நடவடிக்கைகள் எடுக்கத் தவறினால், சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடும் நாடுகள், சபையின் அதிகாரத்தை மதிக்கமாட்டா என்று திரு. பார்த்தசாரதி கூறினார்.

அத்துடன், ரொடீஷியாவைத் தடுத்து நிறுத்தாவிட்டால், தெற்கு ஆபிரிக்கா முழுவதுமே இனக்கலவரங்களுக்குப் பலியாகுமென்றும் அவர் சபையை எச்சரித்தார்.

ரொடீஷிய விவகாரத்தில் பிரிட்டன் மிகவும் பிந்தியும் அதுவும், மிகவும் குறைவான நடவடிக்கைகளையே இதுவரை எடுக்கத் துணிந்துள்ளது என்றார் பார்த்தசாரதி.

இந்தியப் பிரதிநிதியின் கோரிக்கையை ஆதரித்துப் பேசிய கனடாப் பிரதிநிதி ரொடீஷியாவுக்கெதிராகப் பலமான நடவடிக்கைகளைச் சபை எடுக்கவேண்டியது அவசியமே என்று கூறினார். பிரெஞ்சுப் பிரதிநிதியும், இதே கருத்தை வெளியிட்டார்.

### சோவியத் குற்றச்சாட்டு

சோவியத் பிரதிநிதி பேசுகையில், எண்ணெய் முதலிய கேந்திரப் பொருள்களை மேற்கத்தைய வல்லரசுகளான பிரிட்டனும், அமெரிக்காவும் ரொடீஷியாவுக்கு விற்பனை செய்வதாகக் குற்றஞ்சாட்டினார்.

இக்குற்றச்சாட்டை பிரிட்டிஷ் பிரதிநிதி மறுத்தார்.

## ரொடீஷிய படையினருடன் ஆபிரிக்க தேசிய வாதிகள் மோதல்

### 47 பேர் கொல்லப்பட்டனர்

சலிஸ்பரி, மார்ச் 21

இதற்கிடையில், ரொடீஷியாவில் ஆபிரிக்க தேசியவாதிகளுக்கும், ரொடீஷிய பாதுகாப்புப்படையினருக்கு மிடையே நடைபெற்ற சண்டையொன்றில், 14 ஆபிரிக்க தேசியவாதிகள் கொல்லப்பட்டதாகச் சலிஸ்பரியிலிருந்து கிடைக்கப்பெறும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆபிரிக்கத் தேசியவாதிகளில் பேச்சாளர் ஒருவர், இச்சண்டையில் மொத்தம் 33 ரொடீஷிய பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டதாகக் கூறியுள்ளார்.

ரொடீஷியப் பாதுகாப்புப் படையினருக்கும், ஆபிரிக்க தேசிய வாதிகளுக்குமிடையே ரொடீஷிய-ஸாம்பிய எல்லையில் சில தினங்களாகச் சண்டை நடந்துவருவது தெரிந்ததே.

## இஸ்ரேல் பாதுகாப்பு மந்திரி டயானுக்குப் பலத்த காயம்

### புதைபொருளாராய்ச்சி செய்த இடத்திலேற்பட்ட விபத்து

டெல்அவிவ், மார்ச் 21

இஸ்ரேல் பாதுகாப்பு மந்திரிஜெனரல்மோஷி டயான் இங்கு நடைபெற்ற ஒரு விபத்தில் படுகாயமடைந்துள்ளார்.

புதைபொருளாராய்ச்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில், ஒரு குகைக்குள்ளிருந்த அவர், அக்குகையில் ஏற்பட்ட சடுதியான சரிவொன்றினால் சிதறிப் பறந்த பாறைக் கற்களாலும், மண்ணாலும் அடிக்கப்பட்டார்.

இரத்தம் பீறிட்டோடும் நிலையில், அவர் ஆஸ்பத்திரிக்குவிரைந்து கொண்டு செல்லப்பட்டார். அவருக்கு அவசர சிகிச்சை அளிக்கப்பட்டது.

திரு. டயானின் உடல் நிலை குணமடைந்துவருவதாகவும், எவ்வித ஆபத்தும் அவருக்கில்லையென்றும் டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

திரு. டயான் புதைபொருளாராய்ச்சியில் ஈடுபாடுகொண்டவரென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### புதுச்சேரியில் அரசியல் நெருக்கடி

புதுடில்லி, மார்ச் 21

புதுச்சேரி சட்டசபையில் கொண்டுவரப்பட்ட வரி மசோதாவொன்றுக்கு 14 அங்கத்தவர் சாதகமாகவும் 14 பேர் பாதகமாகவும் வாக்களித்தனர்.

மசோதாவை நிறைவேற்றச் சபாநாயகர் தனது வாக்கைப் பாவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிளதால் பதவியிலுள்ள வெங்கடேச ரெட்டியார் மந்திரிசபையைக் கலைத்துவிட வேண்டுமென்று எதிர்க்கட்சியினர் ராஷ்டிரபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### இந்திய — தெ.கொரிய ரேடியோ இணைப்பு

புதுடில்லி, மார்ச் 21

இந்தியாவுக்கும் தென்கொரியாவுக்குமிடையே டெலிவிஷன் இணைப்பு ஒன்று தொடக்கம் ஆரம்பமாகியுள்ளது.

### பீஹார் பிரச்னை தீரவில்லை

பட்னா, மார்ச் 21

பீஹார் மந்திரிசபை பதவியிலிருந்து வீழ்ந்ததைத் தொடர்ந்து அங்கு ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி இன்னும் தீரவில்லை.

பிறிதொரு மந்திரி சபையை நிறுவும் முயற்சியில் கவர்னர் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்.

### மின்னல் தாக்கி ஒருவர் மரணம்

கோலாலம்பூர், மார்ச் 21

கோலாலம்பூரில். மின்னல் தாக்கியதன் விளைவாக ஒருவர் இறந்தார். மற்றும் 3 பேர்களுக்குக் காயம் ஏற்பட்டது.

### சிங்கப்பூர்வர்த்தக கோஷ்டி இந்தியா வந்தது

புதுடில்லி, மார்ச் 21

ஏழு அங்கத்தவர் அடங்கிய வர்த்தகக் கோஷ்டியொன்று நேற்றுச் சிங்கப்பூரிலிருந்து இந்தியா வந்து சேர்ந்துள்ளது. இரு நாடுகளுக்குமிடையேயான வர்த்தகத் தொடர்புகள்பற்றி இத்தூதுகோஷ்டி ஆராயும்.

### மைசூர் ரயில் விபத்து

#### இறந்தவர் தொகை 53 ஆகியுள்ளது

பங்களூர், மார்ச் 21

மைசூர் அருகேயுள்ள பால்வி என்ற புகையிரத நிலையத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பயங்கர ரயில் விபத்தில், உயிரிழந்தோர் தொகை 53 ஆக உயர்ந்துள்ளது. இறந்தவர்களில் 10 பேர் இதுவரை அடையாளங் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

புகையிரத நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த பிரயாணிகள் ரயிலொன்றுடன், பூனாவிலிருந்து பங்களூர் நோக்கி வந்து கொண்டிருந்த கடுகதி ரயில் ஒன்று மோதியதால் ஏற்பட்ட இவ்விபத்தில், மற்றும் 41 பேர் காயமுற்றனர்.

## நாஸர் மந்திரி சபையில் முக்கிய மாற்றங்கள்

### உதவிப்பிரதமர் இருவர் பதவி நீக்கம்

கெயிரோ, மார்ச் 21

ஐக்கியஅரபுக் குடியரசின் ஜனாதிபதி நாஸர் தமது மந்திரி சபையில் சில முக்கிய மாற்றங்களைச் செய்துள்ளார். இரண்டு உதவிப் பிரதமர்களுக்கு 'கல்தா' கொடுத்துள்ளார். மற்றும் ஒருவரை மந்திரிப்பதவிக்குக் கீழிறக்கியுள்ளார்.

நாஸரின் உதவிப் பிரதமராகத் தற்போது திரு ஹுசெயின் அல்ஷாபி ஒருவரே இருக்கிறார்.

உதவிப் பிரதமர் திரு. ஸக்கரயா மொஹிதீனும் உதவிப்பிரதமர் திரு அலி ஸப்ரியும் புதிய மந்திரிசபையில் இடம்பெறவில்லை

மற்றுமொரு உதவிப்பிரதமர் சாதாரண மந்திரிப்பதவிக்கு இறக்கப்பட்டுள்ளார்'

போர் மந்திரியாக திரு. முகம்மது பாஸியும் வெளியுறவு மந்திரி திரு. முகம்மது ரியாடும் தொடர்ந்து கடமையாற்றுகின்றனர்.

## பஞ்சாப்பில் ராஷ்டிரபதி ஆட்சி நிறுவக்கோரிக்கை

புதுடில்லி, மார்ச், 21

முன்னாள் பஞ்சாப் முதல் மந்திரி திரு. குர்னாம் சிங் தலைமையில் நேற்று இங்கு இந்திய ராஷ்டிரபதியைச் சந்தித்த பஞ்சாப் சட்டசபை எதிர்க்கட்சி அங்கத்தவர்களின் தூதுகோஷ்டியொன்று, பஞ்சாப்பில்ராஷ்டிரபதி ஆட்சியைப் பிரகடனப்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது. விரைவில் இடைக்காலத் தேர்தலை அங்கு நடத்துமாறும் அவர்கள், ராஷ்டிரபதியைக்கேட்டுள்ளனர்.

எதிர்க்கட்சியினரின் தூதுகோஷ்டி, பஞ்சாப்சபாநாயகர், சபையைக் கலைத்தது சரியான நடவடிக்கையே என்றும், சபையைக் கூட்டுமாறு கவர்னர் விதித்த கட்டளை சட்டவிரோதமானது என்றும் ராஷ்டிரபதியிடம் வலியுறுத்தியுள்ளது.

ஆனால், இதற்கிடையில், இந்திய ராஜ்யசபையில், பஞ்சாப் விவகாரம் நேற்று விவாதிக்கப்பட்டது. அப்போது பேசுகையில், கவர்னரின் நடவடிக்கையை முற்றிலும் அரசியற்சாஸன விதிகளுக்குட்பட்டதொன்றே என்று இந்திய உள்துறைமந்திரி திரு. சவான் கூறினார்.

## அரபுப் பிராந்தியங்களிலிருந்து இஸ்ரேல் வெளியேற வேண்டும்

### யூகோ. ஜனாதிபதி டிட்டோ எச்சரிக்கை

பெல்கிரேட், மார்ச் 21

தான் கைப்பற்றிய அரபுப் பிராந்தியங்களிலிருந்து இஸ்ரேல் வெளியேற வேண்டுமென யூகோஸ்லாவிய ஜனாதிபதி மார்ஷல் டிட்டோ, இங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையில் வலியுறுத்தினார். அது உயிருடன் வாழ வேண்டுமானால், அது அப்பிராந்தியங்களை விட்டு வெளியேறி விடுவதே நல்லது என்று அவர் எச்சரித்தார்.

மேற்கு ஆசியாவில் சமாதானம் நிலவுவதற்குத் தடையாகவிளங்குவதுடன், உலக சமாதானத்துக்கு ஓர் ஆபத்தாகவும் இஸ்ரேல் இருந்து வருகிறது என்று டிட்டோ மேலும் கூறியுள்ளார்.

மேற்கு ஆசியாவில் ஐ. நா. விசேஷ பிரதிநிதியான டாக்டர் குனார் ஜாரிங்கின் சமாதான விஜயம் தோல்வியுறுவதற்கு முக்கிய காரணம் இஸ்ரேலே என்று டிட்டோ தெரிவித்தார்.

பரந்த அடிப்படையில், கூட்டுச்சேரா நாடுகளின் மாநாடொன்றை விரைவில் கூட்டும் திட்டம் பற்றிக் குறிப்பிடுகையில், அதற்கான முயற்சிகளைத் தாம் தொடர்ந்து எடுத்து வருவதாக அவர் கூறினார்.

## சர்வதேச நாணய முறை மாற்றியமைக்கப்பட வேண்டும்

### பிரெஞ்சு ஜனாதிபதி டி கோல் வலியுறுத்தல்

பாரிஸ், மார்ச் 21

சர்வதேச நாணய முறை மாற்றி அமைக்கப்பட வேண்டுமெனவும், பல சீர்திருத்தங்கள் அதில் செய்யப்படவேண்டுமெனவும் பிரெஞ்சு ஜனாதிபதி டிகோல் நேற்றுத் தமது மந்திரிசபையிடம் தெரிவித்தார்.

தங்கத்துக்கான புதிய இரு விலைப் பட்டியலுடன் பட்டதற்போதைய நாணய முறை நியாயமானதொன்றல்லவென்று குறிப்பிட்ட ஜனாதிபதி, தங்கத்தை அடிப்படையாகக் கொண்ட வேறொரு புதிய நாணய முறை ஏற்படுத்தப்பட வேண்டுமென்றார். இது பற்றி ஐரோப்பிய பொதுச் சந்தை நாடுகள் தீர்க்கமாகச் சிந்திக்கவேண்டுமெனவும் டிகோல் கேட்டுக் கொண்டார்.

ஜனாதிபதியின் பேச்சை விமர்சித்த பிரெஞ்சு பொருளாதார நிபுணர்கள், அமெரிக்க டொலரின் ஆதிபத்தியத்துக்கு எதிரான புதிய நடவடிக்கையாக அதைக் கருதுகின்றனர்.

லண்டனில், பிரெஞ்சு ஜனாதிபதி டிகோலினுடைய பேச்சையிட்டு எவ்வித அபிப்பிராயமும் வெளியிடப்படவில்லை. ஆனால் சர்வதேச நாணயமுறையை மாற்றியமைக்கும் எவ்வித திட்டத்தையும் பிரிட்டன் எதிர்க்கும் என்பது மட்டும் தெளிவு என்று பிரிட்டிஷ் அரசியல், பொருளாதார வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்தன.

பிரசல்ஸில், டி கோலின் திட்டம் அவ்வளவு உசிதமானதல்ல என ஐரோப்பிய பொதுச்சந்தை நாடுகளின் பிரதிநிதிகள் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடையாள அணிவகுப்பு

குரும்பசிட்டி, வியா.

சங்கானை குமரேசன் கொலை வழக்கு சம்பந்தமாக இம்மாதம் 23-ம் திகதி மல்லாகம் நீதிமன்றத்தில் பதில் நீதிபதி திரு. பாலசிங்கம் முன்னிலையில் அடையாள அணிவகுப்பு நடைபெறவிருக்கின்றது. இவ்வணிவகுப்பின்போது சாட்சிகள் எதிரிகளை அடையாளம்காட்ட கோரப்படுவர்.

இவ்வருடம் ஜனவரி மாதம் 31-ம்திகதி சங்கானை நிச்சாமம்பகுதியைச்சேர்ந்த வன்னியன் குமரேசன் என்பவர் கொலைசெய்யப்பட்டது சம்பந்தமாக ஐவர் ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

இக்கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட நாலாவது எதிரி எஸ். சுப்பிரமணியம் இன்று தமது வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் மூலம் நீதிமன்றத்தில் சரணடைந்தார். இவரை இம்மாதம் 23-ம் திகதிவரை ரிமாண்டில் வைக்க உத்தரவிட்டார். மற்றைய நான்கு எதிரிகளான செல்வரத்தினம், சுப்பையா, நடேசு, ஆறுமுகம் ஆகியோர் ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## சைவ நெறிச் சீலராக வாழ்ந்தவர்

காரைநகர், வியா.

''திருநீறு, சந்தனம் அணிந்து சைவநெறிச் சீலராக வாழ்ந்து இசை இன்பத்தால் எல்லோரையும் மகிழச்செய்த நமது சங்கீத ஆசிரியர் திரு. இரத்தினசிங்கத்தின் பிரிவு நமது கல்லூரிக்கும் சங்கீத உலகிற்கும் ஒரு பேரிழப்பாகும்'' என்க் காரைநகர் யாழ். நகர்க் கல்லூரி சங்கீத ஆசிரியர் திரு. இரத்தினசிங்கத்தின் மரணம் குறித்து அனுதாபம் தெரிவிக்கும் முகமாக நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் வித்துவான் முருகேசன் பேசும்போது குறிப்பிட்டார்.

## வடமராட்சியில் ச. ச. சமாஜம்

புலோலி, வியா.

வடமராட்சி காரியாதிகாரி பிரிவிலுள்ள சுமார் 75 சனசமூக நிலையங்கள் சேர்ந்து காரியாதிகாரி கந்தோரில் சனசமூக நிலையங்களின் சமாசம் ஒன்றை அமைத்தனர்.

சமாசத்தின் போஷகராக வடமராட்சி காரியாதிகாரி கே. என். ஜெயகாந்தனும், தலைவராக பருத்தித்துறை திடீர் மரணவிசாரணை அதிகாரி ஆர். எஸ் இராமநாதனும் தெரிவுசெய்யப்பட்டனர். காரியதரிசியாக சி. செல்லையாவும், பொருளாளராக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கே. ஏ. நவரத்தினமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

நிர்வாகசபை அங்கத்தவர்களாக ஒவ்வொரு கிராமத்திற்கும் இரண்டு அங்கத்தவர்கள் வீதம் பன்னிரு பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## பலி நிறுத்தம்

அளவெட்டி, வியா.

பனை வைரவர் கோவிலில் பலியிடுவதை நிறுத்தியுள்ளார். கோவில் முகாமையாளர்

பண்டைய காலந்தொட்டு பனை வைரவர் கோவிலில் இடம்பெற்று வந்த மிருகப் பலியை இம்முறை நடத்துவதென ஒரு சாராருக்கும் நடத்தக்கூடாதென ஒரு சாராருக்கும் ஏற்பட்ட சச்சரவுகளைத் தொடர்ந்து கடைசியில் இரு சாராரும் ஒன்றுபட்டு மிருகபலியை நிறுத்தி பொங்கல் பூஜை நடாத்தினார்கள்

## தற்கொலை

சுழிபுரம், வியா.

சுழிபுரத்திலுள்ள சலவைத்தொழிற்சாலையின் உரிமையாளர் த. சின்னத்துரை முருகேசு 36 வயது) என்பவர் நேற்று முன்தினம் தமது வீட்டில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

மூன்று குழந்தைகளுக்குத் தந்தையான காலம் சென்ற முருகேசு கடந்த பத்து வருடங்களாக வயிற்று வலியினால் கஷ்டப்பட்டதாக மரண விசாரணையின்போது காலம் சென்றவரின் மனைவி தெரிவித்தார்.

வலி-மேற்கு மரண விசாரணை அதிகாரி திரு. கே. சேனாதிராசா, இறந்தவர் வயிற்று வலியினால் சுருக்கிட்டுத் தற்கொலை செய்ததாக தீர்ப்பு வழங்கினார்.

## ''இளைஞர்களின் விழிப்புணர்ச்சியே காரணம்''

உடுவில், வியாழன்

மக்களிடையே ஏற்படும் ஒற்றுமைதான் பலம்வாய்ந்தது. இளைஞர்கள் ஒற்றுமைப்பட்டால் பல நல்ல சாதனைகளை நிலைநிறுத்த முடியும். இக்கோவிலில் நெடுங்காலமாக நடத்தப்பட்டுவந்த மிருகபலி நிறுத்தப்பட்டது மகிழ்ச்சிக்குரியது. இளைஞர்களிடையே ஏற்பட்ட ஒற்றுமையும் பொதுமக்களின் விழிப்புணர்ச்சியும்தான் மிருகபலி நிறுத்தவெற்றிக்கு காரணம்.

மாசியப்பிட்டி முத்துமாரி அம்மன் கோவிலில் நேற்று நடைபெற்ற வருடாந்த குளுர்த்தி விழாவின்போது உரையாற்றிய அளவெட்டி கிராமசேவையாளர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. சி. விநாசித்தம்பி பேசுகையில் பல்லாண்டுகளுக்கு முன்னிருந்த நிலையிலும்பார்க்க இன்று மக்களிடையே சமய விழிப்புணர்ச்சி அதிகரித்துள்ளது என்றார்.

## நல்லூர் கி. ச. தேர்தல் 7-ம் நடைபெறும்

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லூர் கிராமசபையின் புதிய தேர்தல் அடுத்தமாதம் 7-ம் திகதி நடைபெறவிருக்கின்றது. 12 வட்டாரங்களைக் கொண்ட இக்கிராமசபையில் 5-ம் வட்டாரம்தவிர ஏனைய வட்டாரங்களுக்கு தேர்தல் நடைபெறும்.

புலோப்பளைகிராமசபைத் தேர்தல் அடுத்தமாதம் 2-ம் திகதியும், கச்சாய் கிராமசபைத்தேர்தல் அடுத்தமாதம் 4-ம் திகதியும் நடைபெறவிருக்கின்றது. [கா. நி]

## மயிலிட்டியில் கி ச. தேர்தல்

அளவெட்டி, புதன்

மயிலிட்டி கிராமசபைக்கான புதிய அங்கத்தவர்களை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் ஏப்பிரல் 9-ம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளன.

இக்கிராமசபையின் 18 வட்டாரங்களில் போட்டியில்லாது தெரிவு செய்யப்பட்ட 6 வட்டாரங்களைத் தவிர மிகுதி 12 வட்டாரங்களிலும் தேர்தல் ஏப்ரல் 9-ம் திகதி காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை நடைபெறும்.

## அதிபர் இடமாற்றம்

உடுவில், வியா

முள்ளியவளையிலுள்ள வித்தியானந்தாக் கல்லூரி அதிபர் திரு. வ. பொன்னம்பலம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## சித்திரஆசிரியர் கூட்டம்

நல்லூர், வியாழன்

''ஓவியம் என்பது நாதம் கடந்த உலக சிருஷ்டி இயற்கையின் நகலன்று'' என்று வடமாநில சித்திர வித்தியாதிகாரி கலாகேசரி திரு. ஆ. தம்பித்துரை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெற்ற காங்கேசன்துறை வட்டார சித்திரஆசிரியர்கள் கூட்டத்தில் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

முற்காலத்து மாணவர்கள் முதலில் இலக்கணத்தை வெகுநாட்கள் கஷ்டப்பட்டு கற்பார்கள் பின்னர்தான் காவியம் அலங்கார சாஸ்திரம் முதலியன கற்பதற்கு உரிமைபெறுவார்கள். அதாவது உழைப்பு முதலிலும் இன்பம் பின்னருமாகும் ஆனால் நாம் இன்றைய நிலையில் கல்விமுறையில் காவியமும் இலக்கணமும் நன்கு கற்பயில்வதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றோம். ஆனந்தமே உழைப்புக்கு வேண்டிய உற்சாகத்தை அளிக்கிறது.

## யாழ். ஆஸ்பத்திரியில் புதிய வார்ட்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் புதிய வார்ட் தற்போது பூர்த்தியடையும் நிலையிலுள்ளது. இக்கட்டிடம் ஜூலைமாதத்தில் திறந்து வைக்கப்படும்.

104 படுக்கை வசதிகளைக் கொண்ட இந்த மேல்மாடி வார்ட் திறக்கப்பட்டதும், தற்போது இங்குள்ள சத்திரசிகிச்சை வார்ட்டுகளுக்கான 3-ம், 10-ம் வார்ட்டுகள் இதற்கு மாற்றப்படும். 14-ம் ஏ, பி வார்ட்டுகள் தற்போது இடநெருக்கடி உள்ளதாக இருப்பதால் இதில் ஒன்று 10ம்வார்ட்டுக்கு மாற்றப்படலாமெனவும் தெரியவருகிறது.

இது தவிர 6ம் வார்ட்டும் ஏ, பி, பிரிவுகளில் இடநெருக்கடி உள்ளதாக இருப்பதால் இதிலும் ஒரு பிரிவு புதிய ஒரு தனி வார்ட்டாக மாற்றப்படலாம். இங்குள்ள இட நெருக்கடி காரணமாகவே புதிய 'பாஸ்' முறைத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா புதிய வார்ட்டைத் திறந்து வைப்பார். [ஈ. நி.]

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

### வெள்ளிக்கிழமை 22-3-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நமதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு. 7-30 குரல்வகை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 தேர்ந்த இசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும் பயிர்.

இரவு 6-15 பஜனை, 6-45 பாவலம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 விவேகச்சக்கரம் இலக்கி[illegible] 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 செய்திச் சுருக்கம் [illegible] துரைராசா.

அராலி

## ப. நோ. கூ. சங்க கூட்டம்

அராலி, வியாழன்

அராலி விக்னேஸ்வர ப. நோ. கூ. சங்க விசேட பொதுக்கூட்டம் உப தலைவர் திரு. இ. நாகலிங்கத்தின் தலைமையில்கூடி நடப்பு வருடத்திற்கு தனியார் கடனெல்லையும் ஆலோசனை செய்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நடப்பு வருடத்தில் நெற்செய்கைக்கு ரூ. 20 000 வெங்காயச்செய்கைக்கு ரூ. 18,000 உருளைக்கிழங்கு பயிரிட ரூ. 2000 வங்கிக் கடனாகப் பெறுவதெனத் தீர்மானிக்கப்பட்டன.

## ஆசிரியர்க்கு பயிற்சி

காங்கேசன்துறை வியா.

வலிகாமம் வடக்கு ஆசிரியர்களுக்கு நேற்று யூனியன் கல்லூரியில் கல்வி இலாகாவினால் பயிற்சி அளிக்கப்பட்டது.

பயிற்றப்பட்டகலைவகுப்பு விஞ்ஞான வகுப்பு ஆசிரியர்களுக்கு நேற்றைய முன்தினம் செல்லிப்பழை யூனியன் கல்லூரி விஞ்ஞான கூடத்திலும், கலைகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வேறாகவும்பயிற்சி ஒன்று அளிக்கப்பட்டது.

இப் பயிற்சி வகுப்பில் வலிகாமம் வடக்கில் உள்ள அனேக ஆசிரியர்கள் சமூகம் கொடுத்தினர். இவர்களுக்கான பயிற்சி வகுப்புகள் இன்னும். சில தினங்களுக்கு நடைபெறுமெனத் தெரியவருகிறது.

## தலைமை ஆசிரியர் இல்லை

புலோலி; வியாழன்

நாகர் கோயில் பாவித்தியாலயத்தின் அவல நிலைபற்றிப் பெற்றோர்கள் கவலையடைந்துள்ளனர்.

130மாணவர்களுக்குமேல் கல்விபயிலும் இப்பாடசாலையில் போதிய ஆசிரியர்கள் இருந்தும், பாடசாலைக்கு இன்னமும் தலைமையாசிரியர் நியமிக்கப்படவில்லையாம்

முன்பு இப்பாடசாலைக்கு தலைமையாசிரியர் இருந்து இடமாற்றம் செய்யப்பட்ட தலைமையாசிரியர் இடத்துக்கு இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். இலக்கிய வட்டத்தின் ஆதரவில் நான் படித்துச் சுவைத்த அண்மைக் கால நூல் என்னும் பொருள்பற்றிய கருத்தரங்கு இன்று மாலை நடைபெறவிருக்கிறது. யாழ். நகரமண்டபத்தில் திரு. வி. கந்தவனம் தலைமையில் மாலை 5 30 மணிக்கு நடைபெறும்

இக் கருத்தரங்கில் இரசிகமணி கனக செந்திநாதன், கவிஞர் இ. நாகராஜன், திரு ஏ ரி. பொன்னுத்துரை செ. சுந்தரம்பிள்ளை திரு. ச. சபாரத்தினம் [சசிபாரதி] மு. கனகராஜன் ஆகியோர் முறையே கட்டுரை நூல் சிறுகதை நூல் நாடகநூல் கவிதை நூல் குழந்தைகளுக்கான நூல் நாவல் ஆகியவைபற்றி உரை நிகழ்த்துவார்கள். [கா-நி]

## ஏப்ரலில் இசைவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

பதினேழாவது ஆண்டு இசைவிழாவை ஏப்ரல் மாதம் 17 ம் திகதி முதல் 24 ம் திகதி வரை வண்ணை அரசடி விநாயக ஆலயத்திற் கருகாமையில் நடாத்துவதெனயாழ்ப்பாணரஸிக ரஞ்சனசபாவின் நிர்வாகசபை தீர்மானித்துள்ளது.

## நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

வடமாகாண கூட்டுப்பந்தாட்டச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகசபை உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்:- அரசாங்கஅதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா. உதவிப் போஷகர்கள்:- யாழ். பொலிஸ் சுப்பிரிண்டன் திரு ஆர். சுந்தரலிங்கம், திரு. ஈ. சபலிங்கம் திரு. ஆர் துரைராசா திரு. லெபரீனன் அலஸ். தலைவர்:- டாக்டர் திரு. எச். பி. செல்லையா, உப தலைவர்கள்:- திரு. ஏ பி. ஞானரட்னம், திரு. சோமசுந்தரம் காரியதரிசி:- திரு. ஏ. வின்ஸ்லோ, உபகாரியதரிசியும் தனாதிகாரியும்:- திரு. டி. ஜே துரைரத்தினம் 5 பேர் நிர்வாகசபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர். (வி. நி.)

ஃ ஃ ஃ

குரும்பசிட்டி, வியாழன்

மாலை- கொல்லங்கலட்டி சனசமூகநிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட புதிய நிர்வாகிகளாக தெரிவுசெய்யபபட்டனர்.

தலைவர்: திரு. வ. சரவணமுத்து, உபதலைவர்கள் திருவாளர்கள்: க. நவரத்தினம், வி. விநாசித்தம்பி, வ. குமாரசாமிக்குருக்கள். காரியதரிசி: திரு. ந. ஜீவேஸ்வரா. தனாதிகாரி: திரு. சி. சத்தியலோகநாதன். நூல் நிலைய பொறுப்பாளர்: திரு க. கனகரத்தினம்.

எட்டுப்பேர் கொண்ட நிர்வாக அங்கத்தவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஃ ஃ ஃ

உடுப்பிட்டி. வியாழன்

தென்கருணை வல்லுவர் சனசமூகநிலையத்தின் வருடாந்த நிர்வாகசபைக் கூட்டத்தில் இவ்வாண்டிற்கான புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

போஷகர் திரு சி, மார்க்கண்டு, தலைவர் திரு. கி. கோபால், உபதலைவர் திரு சி. வெள்ளைக்குட்டி, காரியதரிசி திரு. க. இரத்தினம் உப காரியதரிசி: திரு, தா. சண்முகம் தனாதிகாரி: திரு. சி. தியாகு, உப தனாதிகாரி திரு. தா சதாசிவம். பத்திராதிபர்: திரு, அ. சுந்தவனம், உப பத்திராதிபர் செல்வன் வ. மகேந்திரம் பரிசோதகர்: செல்வன் மா. ஜெயக்கொடி.

கிராம மக்களின் நலனைக் கவனிக்கும் முகமாகத் திருவாளர்கள் சி. வெள்ளைக்குட்டி, தா. சதாசிவம், க. இரத்தினம், ச. சுந்தரம், க. சின்னப்பு, கி. கோபால் சி. கிருஷ்ணபிள்ளை ஆகியோரடங்கிய பொதுக்குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## விவசாயப் போட்டியில் தெரிவு

மூதூர், வியாழன்

கடந்த வருடம் கல்விப் பகுதியால் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட விவசாயப் போட்டியில் திருகோணமலை மாவட்ட மூதூர் வட்டாரத்திலுள்ள கிளிவெட்டி அரசினர் வித்தியாலயம் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது. இத்தோடு மாகாண ரீதியில் வரிசைப்படுத்தப்பட்டதில் கிழக்கு மாகாணத்திலும் இதற்கே முதலிடம் கிடைத்திருப்பதாகத்தெரியவருகிறது. விவசாயப் போட்டியின் பெறுபேறுகள் அடங்கிய அட்டவணை விவசாயப் பகுதி வித்தியாதிபதி, துரைசிங்கத்தால் கடந்த மாதம் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aayanaham.org

## வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாச நெற்குற்றும் ஆலை சுன்னுகம்

### கூலி ஒப்பந்தம்

சமத்தொழில் இலாகா நெற்களஞ்சியத்திலிருந்து நெல் மூடைகளை லொறிகளில் ஏற்றி நெற்குற்றும் ஆலைச் சேமிப்புச் சாலையில் இறக்கி, அடுக்கி தேவைக்கேற்ப காலத்துக்குக்காலம் நெல்லை ஊறப்போட்டு, அவித்து, பரவிக்காயவிட்டு நெற்குற்றும் இயந்திரங்களுக்கு எடுத்துச் சென்று தேவைக்கேற்றபடி இயந்திரங்களில் போட்டு குற்றிய அரிசியை வக்குகளில் காயப்போட்டு, அரிசியை மூடையில் போட்டுத் தைத்துக் கொடுப்பதற்கு கூலி ஒப்பந்தத்திற்காக கேள்விப்பத்திரங்கள் வரவழைக்கப்படுகின்றன.

மேற்படி பத்திரங்களை அலுவலக நேரங்களில் சமாசத்திடம் ரூபா 50/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முடிவு திகதி 26-3-68 மாலை 4-30 மணிவரை.

காரியதரிசி
வ. ப. வி. உ. கூ. சமாசம்
111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். 501

## ''போட்டிகளில் பங்குபெறுததால் சுறுசுறுப்பில்லாமல்இருக்கிறேன்''

### எஸ். ஜே. வி. கூறுகிறர்

அளவெட்டி, வியாழன்

''மாணவர்களின் கல்வியின் முன்னேறுவது மாத்திரமன்றி அரசாங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இப்படியான கிராமப் பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றுவதால் உடல் வளர்ச்சியுறவுதவாகிறது. நான் பாடசாலையில் கல்வி பயிலும் நேரத்தில் இப்படிப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் இடம் பெருத காரணத்தாலும், நான் அதில் பங்கு கொள்ள கவனம் எடுக்காததாலும் எனது இப்போதைய உடல் நிலை சுறுசுறுப்பின்மையாக இருக்கிறது. இக்கால மாணவ சமுதாயம் இப்படிப்பட்ட விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றி எதிர் காலத்தில் நாட்டுக்குச் சேவை செய்ய திடகாத்திரம் உள்ளவர்களாகத் திகழ வேண்டும்.''

இவ்வாறு காங்கேசன் துறை பாராளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சித் தலைவருமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், காங்கேசன்துறை வட்டாரத்துக்குட்பட்ட 23 தமிழ் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினர்.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் திரு. இ. தாமோதரம்பிள்ளை தலைமையில் இவ் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

வட்டார வித்தியாதிபதி திரு. சிமான்பிள்ளையும் பேசினர். வெற்றியீட்டிய வீரர்களுக்கு திருமதி. சிமான்பிள்ளை பரிசில்கள் வழங்கினர்.

இவ் விளையாட்டுப் போட்டியில் கீரிமலை நகுலேஸ்வரா முதலாம் இடத்தையும், பன்னுலை சேரி. வைசபை வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும், தெல்லிப்பளை வடமேற்கு மெய்கண்டான் வித்தியாலயம் மூன்றும் இடத்தையும் பெற்றன.

## சேவைநலம் பாராட்டு

நெடுந்திவு, வியாழன்

நெடுந்திவு மத்தியகிராம முன்னேற்றச்சங்கத் தலைவரும் வடபகுதியில் பிரமாண்டமான மீன்பிடித்துறைமுகத்தை சிரமதானமூலம் செய்ய ஆரம்பித்து வைத்தவரும் 6-ம் வட்டாரகிராம சபை அங்கத்தவருமான திரு. அ. மரியானின் தொண்டை நெடுந்திவு மத்திய கிராமமுன்னேற்றச்சங்கம் பாராட்டியுள்ளது.

## நன்றிநவிலல்

காலஞ்சென்ற P. W. D ஓவசியர் வேலுப்பிள்ளையின் மனைவியும் Dr. விஜயகுமார்த்தி, பரமநாதன், திருமதி செல்வத்துரை, திருமதி தில்லையம்பலம், திருமதி ஆறுமுகம், திருமதி துரைச்சாமியவர்களின் தாயாரும், எனது மாமியாருமான திருமதி மீனட்சிப்பிள்ளையவர்களின் ஈமக்கிரியைகளில் கலந்துகொண்ட உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

த. ஆறுமுகம் ஆசிரியர்,
274/2 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். 1954

## விற்பனைக்கு

காணி

யாழ்ப்பாண நகரில் நாலு புறமும் மதில் சுவரும், கிணறுமுள்ள ஆறுபரப்புக் காணி முழுவதும் இருபதுதையாயிரம், கடனும் கிடைக்கும். உரிமையாளர்: இ. செல்லத்துரை, 271, நாவலர்வீதி, யாழ்ப்பாணம். 1627

## வரி விளம்பரம்

### தேவை

நெசவாளர்!

அனுபவம் வாய்ந்த பெண் நெசவாளர்கள் தேவை. விடுதி வசதிகளுமுண்டு. நேரில் சமுகம் கொடுக்கவும். உமா வீவேர்ஸ், 244 நாவலர்வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 1625

### கல்வி

வகுப்புகள்:

வர்த்தகம், கலை, வகுப்புகள் காலையிலும் மாலையிலும் இருமொழிகளில் அனுபவம்மிக்க ஆசிரியஆசிரியைகளால் கற்பிக்கப்படுகின்றன. போயா தினங்களிலும் விடுமுறை நாட்களிலும் பெண்களுக்கும் பாடசாலை மாணவர்கட்கும் விசேஷ வகுப்புகள் நடைபெறுகின்றன. விபரங்கட்கு: அதிபர், கணக்கியல் கல்லூரி, 278, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 1628

சிரேஷ்ட வகுப்பு மாணவிக்கு சமஸ்கிருதம் சொல்லிக்கொடுக்க ஆசிரியை / ஆசிரியர் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும், 67 பிரதானவீதி, யாழ்ப்பாணம். 1955

### மெக்கானிக் பாடங்கள்

29-3-68 முதல் நான்காவது மோட்டார் டிராக்டர், டீசல் மெக்கானிக் பாடங்களும் பயிற்சிகளும் விவேகசாரதிப்பயிற்சிகளும் நவீன முறையில் போதிக்கப்படும். விபரங்களுக்கு உடன் நேரில் தொடர்புகொள்ளவும். அதிபர் ஸ்ரீராஜ் ஒட்டோமொபைல் என்ஜினியரிங் நிறுவனம், மொம்சாக் மாளிகை, மேல்மாடி, 11/B, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 1610

## உடற்பயிற்சி போட்டி

உடுப்பிட்டி, வியா,

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளின் வருடாந்த உடற்பயிற்சிப் போட்டி இம் மாதம் 2-ம் 3 24-ம் திகதிகளில் இருதினங்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இம் மாவட்ட உடற்பயிற்சிப் போட்டி ''ஏ'', ''பீ'' என இருபிரிவுகளாகப் பிரித்து நடாத்தப்படும். ஏ—பிரிவில் மகாவித்தியாலயங்களும், மத்தியாலயங்களும் அடங்கும். பீ—பிரிவில் கனிஷ்ட பாடசாலைகள் அடங்கும்.

ஏ—பிரிவுப் போட்டிகள் 23- திகதியும், பீ- பிரிவுப் போட்டிகள் 24-ம் திகதி நடைபெறும்.

## ஜேப்படித் தொல்லை

உடுவில், வியாழன்

சுன்னுகம் சந்தை, பஸ் நிலையம் ஆகிய இடங்களை சுற்றியுள்ள இடங்களில் ஜேப்படிக்காரர்களின் தொல்லை அதிகரித்துள்ளது. பிரயாணிகளிடமும், வியாபாரிகளிடமும் இந்த ஜேப்படி வித்தைக்காரர்கள் தமது கைவரிசையை காட்டி வருகின்றர்கள்.

சந்நிதி கோவிலுக்கு செல்வதற்காக நேற்று சுன்னுகம் பஸ் நிலையத்தை வந்தடைந்த ஒரு பெண்மணி ஜேப்படிகாரர்களின் வலைக்கு இலக்காகி சுமார் 100 ரூபாவை பறி கொடுத்தார்.

அளவெட்டியைச் சேர்ந்த இந்த பெண்மணி சுன்னுகம் பஸ் நிலையத்தில் பொருட்களை வாங்கிக் கொண்டிருந்த பொழுது சனக்கும்பலில் அகப்பட்டு தமது பணத்தை பறி கொடுத்தாராம் கோவிலுக்கு போகக்கூட பணமின்றி தவித்த இப் பெண்மணிக்கு முதியவர் ஒருவர் பணம் கொடுத்து அனுப்பி வைத்தாராம்.

வடமாகாண

## கூடைப்பந்தாட்ட போட்டி சில முடிவுகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

வடமாகாண கூடைப் பந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் 'வான் ருவாட்' வெற்றிக்கிண்ணத்துக்கான வடமாகாண கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது. இச்சுற்றுப்போட்டியில் நடைபெற்று முடிந்த சில போட்டிகளின் முடிவுகள் பின்வருமாறு:

யாழ்ப்பாணம் பற்றீசியன் விளையாட்டுக் கழகத்துக்கும் கோப்பாய் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் சென். பற்றீசியன் வீரர்கள் 50—24 புள்ளிகளால் கோப்பாய் விளையாட்டுக்கழகத்தைத் தோற்கடித்தது. இடைவேளை வரைக்கும் நல்ல போட்டி போட்ட கோப்பாய் வீரர்கள் இடைவேளைக்குப்பின்னர் விட்டுக்கொடுக்கத்தொடங்கினர். இடைவேளையின் போது சென். பற்றீசியன் வீரர்கள் 23 புள்ளிகள் பெற்றிருக்கத் தக்கதாக கோப்பாய் வீரர்கள் 10 புள்ளிகள் மட்டுமே பெற்றனர்.

இடைவேளைக்குப் பின்னர் சென். பற்றீசியன் வீரர்களின் ஆட்டம் அருமையாக இருந்தது. அவர்களது சுறுசுறுப்பான ஆட்டம் போட்டிக்கு விறுவிறுப்பைக் கொடுத்துக்கொண்டிருந்தது. கோப்பாய் விளையாட்டுக் கழகத்துக்கும் இலங்கை கடற்படை வீரர் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற சமபல மோதலில் கடற்படைவீரர் கோஷ்டி 37-22 புள்ளிகளால் கோப்பாய் விளையாட்டுக் கழகத்தை வென்றனர்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டதாரி மாணவர் கோஷ்டிக்கும், யாழ்ப்பாணம் பாடசாலை மாணவர் கூட்டுக்

[6ம்பக்கம் பார்க்க]

## இழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### கையிருப்புசரிபார்த்தல்

வருடாந்த கையிருப்புகள் சரிபார்ப்பதற்காக ஐம்பெட்டாவிலும் மற்றும் பேலிய கொடையிலும்உள்ள பண்டகசாலைகள் 1968ம் ஆண்டு மார்ச் மாதம் 27-ம் திகதி தொடக்கம் 31ந் திகதிவரை மூடப்பட்டிருக்கும்.

பொதுமுகாமையாளர்,
இழக்கிலங்கை கடதாசிஆலைக் கூட்டுத்தாபனம்.

135, யூனியன் பிளேஸ்,
கொழும்பு-2.
1968 மார்ச் 19.



89வது தினம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3-30, 6-30, 9-30
போயாதினங்களில்4காட்சி
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நடித்த
காவல்காரன்

42-வது தினம்!
நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில்2-30
எஸ். எஸ். ஆர். - தேவிகா
நடித்த
மறக்க முடியுமா?

REGAL JAFFNA
Daily at
4-40, -700, & 9-45 p.m
Tony Russel &
Lisa Gastoni
WAR OF THE PLANETS
(in Eastman color)

MANOHARA
JAFFNA
Daily at 4-45,7-00, 9-45p.m.
JERRY LEWIS
in
WHO IS MINDING
THE STORE

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டுநகர்) | ஸ்ரீகிருஷ்ணு (திருமலை) | விஜிதா (ஹட்டன்)



சிவாஜி கணேசன்— சாவித்திரி
ஜெமினி கணேசன், பத்மினி,
கே.ஆர்.விஜயா, தேவிகா, நாகேஷ்
மற்றும் பலர் நடிக்கும்
சரஸ்வதி சபதம்
(ஈஸ்ட்மேன் கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கின் பெரிய கிரிக்கெட் போட்டி

# சென்.ஜோன்ஸ் இனிங்ஸால் பெருவெற்றி

## கச்சதீவு பெருநாள்

யாழ்ப்பாணம், வெள்ளி இலங்கைக்கும், இந்தியாவுக்குமிடையில் 'யாருக்குச் சொந்தம்?' என்ற சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் கச்சதீவு அர்ச். அந்தோனியார் பெருநாள் நேற்று ஆரம்பமானது. ஆயிரக்கணக்கான யாத்திரீகர்கள் நேற்று இங்கிருந்து கச்சதீவுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். இப்போதும் ஆயிரக்கணக்கானவர்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

முப்படை வீரர்களும், பொலிஸ்படையைச் சேர்ந்தவர்களும் கள்ளக் கடத்தலையும் சட்டவிரோதக்குடியேற்றத்தையும்கண்காணிப்பதிலும், தடுக்கும் வேலைகளிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். விமானங்கள் ஆகாயத்தில் தாழப்பறந்து கண்காணிப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ளன.

இங்கிருந்து கச்சதீவுக்கு வியாபாரிகளும் சென்றுள்ளனர்.

## "குடும்பக்கட்டுப்பாடு அவசியம்"

யாழ்ப்பாணம், வெள்ளி 'உலகத்தின் ஜனப்பெருக்கத்தைப் பார்க்கும்போது எதிர்காலத்தை நினைக்கவே பயங்கரமாக இருக்கிறது. முன்னைய வருடங்களைப் பார்க்கிலும், இந்த நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஜனப்பெருக்கம் வேகமாக விருத்தியடைந்து கொண்டு போவதை காணக்கூடியதாகவுள்ளது' என்று இந்திய குடும்பக்கட்டுப்பாட்டுச் சங்க உப தலைவர் திரு. பி. எம். சிங்கி நேற்று சென். ஜோன்ஸ் கல்லூரியில் குடும்பக்கட்டுப்பாடு சம்பந்தமான கருத்தரங்கில் கலந்துகொண்டு உரைநிகழ்த்துகையில் கூறினார். பொருட்காட்சி விழாவும் நேற்று ஆரம்பமானது.

அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமைவகித்தார்.

திரு. சிங்கி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

'இந்தியா சுதந்திரமடைவதற்கு முன்னர் இருந்த ஜனத்தொகையைவிட அரைவாசி மடங்கு ஜனத்தொகை இப்போது உயர்ந்துவிட்டது. இப்போதுள்ள வேகத்தில்போய்க்கொண்டிருந்தால், பயங்கரமான கட்டத்தை அடைந்துவிடும். ஆசிய நாடுகளில் தான் குடும்பக்கட்டுப்பாட்டுத்திட்டம்கட்டாயம்அமுல் செய்யப்படவேண்டும். அரசாங்கத்துடன் பொதுமக்களும் குடும்பக்கட்டுப்பாடு விடைத்பதில் ஒத்துழைக்க வேண்டும்' [கா. நி.]

## வாமதேவன் அபாரமாக ஆடி வெற்றியை தேடிக்கொடுத்தார்

— நமது நிருபர் எம். எஸ். துரைராசா —

யாழ்ப்பாணம், வெள்ளி

**வடமாகாணத்தின் பெரிய கிரிக்கெட் போட்டியான சென்றல்—சென்ஜோன்ஸ் கிரிக்கெட் மோதலில் சென்ஜோன்ஸ் கல்லூரி இனிங்ஸாலும், 2 ஓட்டங்களாலும் அமோக வெற்றியீட்டியது.**

பொலிசாரால் அதிர் வெடிகள் கொளுத்துவது தடைசெய்யப்பட்ட போதிலும் ஆட்டம் முடிவடைந்த கட்டத்தில் திரண்டிருந்த ரசிகர் வெள்ளம் கட்டுப்பாடை மீறி வெடிகள் கொளுத்தி மகிழ்ச்சி ஆரவாரத்தை வெளிக்காட்டியது.

சென்றல் கல்லூரி 2 ஒட்டங்கள் பெறுததால், சென். ஜோன்ஸ் கல்லூரியிடம்இன்னிங்ஸ் தோல்வியை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயித்று கடைசி பதினைந்து நிமிடங்களில் போட்டி மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது. ஒன்றன் பின் ஒன்றாக மூன்று விக்கெட்டுகள் வீழ்ந்தன.

2 இனிங்ஸிலும் 66 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 9 விக்கெட்டுகளை வீழ்த்தி சென்.ஜோன்ஸின் பெரும வெற்றிக்கு காரணமாக இருந்த என். வாமதேவன் ரசிகர்களின் பாராட்டுதலுக்கும், போட்டி முடிந்த பின்னர் சிலரது அன்பின் தொல்லைக்கும் ஆளானார்கள்.

முதல் இனிங்ஸ் ஆட்டத்தில் முதலில் துருப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 169 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சென்றல் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து 63 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதனால் சென்றல் கோஷ்டியை இனிங்சால் வெல்லும் நோக்கத்தோடு சென்.ஜோன்ஸ் கல்லூரி தாம் 2-ம் இனிங்ஸ் துடுப்பெடுத்தாடாமல் சென்றல் கோஷ்டியைத் துடுப்பெடுத்தாட அனுமதித்தது. இதனைத் தொடர்ந்து சென்றல் 2-ம்இனிங்ஸ் துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுகளையும் இழந்து 104 ஓட்டங்கள் பெற்று இனிங்ஸ் தோல்விக்கு இலக்கானது. இவ்வாட்டத்தில் சென்றல் துடுப்பாடி வீரர்களான கே. நரேந்திரன் 4 ஓட்டங்களையும், கே. ஜெயரட்ணகுமார் 9 ஓட்டங்களையும், பரமசிவம் 29 ஓட்டங்களையும், சாந்தகரன் 7ஓட்டங்களையும், பாலேந்திரா (காப்டன்) 23 ஓட்டங்களையும், புரட்சிராசன் 10 ஓட்டங்களையும், எஸ். குமார் ஆட்டம் இழக்காமல் 19 ஓட்டங்களையும் எம் ஜீவானந்தன், எம். தில்லையம்பலம், ரி. தயசிங்கம் ஆகியோர் ஓட்டங்களை எடுக்காமலும் தமது விக்கெட்டுகளை இழந்தனர்.

## இரத்தினபுரி மாநகரசபை தேர்தல்: எதிர்க்கட்சி வெற்றி

கொழும்பு, வியாழன் இரத்தினபுரி மாநகரசபைக்கு நடைபெற்ற தேர்தலில் எதிர்க்கட்சி கூட்டு முன்னணிக்கு எட்டுஸ்தானங்களும் ஐக்கியதேசியக்கட்சிக்கு ஏழுஸ்தானங்களும் கிடைத்திருக்கிறது. கூட்டு முன்னணியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு ஆறு ஸ்தானங்களும் லங்கா சமசமாஜக் கட்சிக்கு ஒன்றும் இலங்கை கம்யூனிஸ் கட்சிக்கு ஒன்றும கிடைத்திருக்கின்றன.

## தாமோதரம் சொலிசிட்டர் ஜெனரல்

கொழும்பு, வியாழன் உதவி சொலிசிட்டர் ஜெனரலாகக் கடமையாற்றிவந்த திரு. வின்சென்ட் தாமோதரம் பதில் சொலிசிட்டர் ஜெனரலாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

திரு. ஜோ. வீரரத்தின உதவி சொலிசிட்டர்ஜெனரலாகவும், திரு. ஏ சி.டி. சொய்சா சிரேஷ்ட முடிக்குரிய வழக்கறிஞராகவும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

## முஸ்லிம் எம். பி.க்கள் 23ந் தேதி கூடுவர்

கொழும்பு,வியாழன் இன்று நடைபெற விருந்த முஸ்லிம் எம். பி. க்களின் கூட்டம் திடீரென ஒத்திப் போடப்பட்டது. மாவட்ட சபை மசோதா பற்றி முஸ்லிம் எம். பி க்கள் இன்று மாலைகூடி ஆலோசிக்க முடிவு செய்திருந்தார்கள்.

அதே தினத்தில் தமிழரசுக்கட்சி எம். பி.க்களும் கொழும்பில் கூடி தற்போதைய பிரச்னைகள் பற்றியும் மாவட்டசபை மசோதாபற்றியும் ஆலோசிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## இலங்கை...

1-ம் பக்கத்தொடர்ச்சி

குகள் கிடைக்க வேண்டும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி முன்னரே இக்கொள்கையை ஏற்றுக் கொண்டிருப்பதால் அவர்களின் ஆதரவு கிடைக்குமென்று அரசாங்கம் எதிர் பார்க்கிறது.

அரசாங்கக் கட்சி அங்கத்தவர்களை மட்டுமே கொண்டிருக்கும் அரசியல் அமைப்பைத் திருத்துவதற்கான பாரிலிமென்டின் தெரிவுக்குழு அங்கத்தவர்களில் பெரும்பாலோர் இலங்கையைக் குடியரசாகப் பிரகடனப் படுத்துவதற்கும் அதன்பின் புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கு அரசியல் நிர்ணய சபை ஒன்றை கூட்டுவதற்கும் ஆதரவு தெரிவித்திருப்பதாகவும் இந்த ஆதரவை ஓர் இடைக்கால அறிக்கையாக பாரிலிமெண்டில் சமர்ப்பிக்க அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

## மதமாற்றத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களது சம்மதத்தைப் பெறுவதற்கு ஒரு தூது கோஷ்டியை அனுப்புவதென்றும் மன்றம் தீர்மானித்தது. ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக வடபகுதியில் தமிழ்த்தலைவர்களைச் சந்திப்பதென்றும் துண்டுப் பிரசுரங்களை வெளியிடுவதென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பிரசாரக் கூட்டங்கள் நடத்துவதென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தீண்டாமைப் பிரச்னையை வைத்து இந்துக்களை மதமாற்றம் செய்யும் முயற்சி பெருந்தீங்குகளை விளைவிக்குமென்பதை பிரதமருக்கும், வண. நாரத தேரோவுக்கும் விளக்கி அந்த முயற்சியை நிறுத்துவதற்கு டாக்டர் நல்லநாதனையும், புரக்டர் சோமசுந்தரத்தையும் பிரதமரிடமும், நாரததேரோவிடமும் அனுப்புவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## அண்ணா.........

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அமெரிக்காவில் சுமார் 3 வாரகாலம் திரு. அண்ணாதுரை தங்கியிருப்பார்.

ஹொனலுலு, டோக்கியோ நகருக்கும் சென்று பின் சிங்கப்பூர் வழியாகத் தமிழகம் திரும்புவார்.

## கூடைப்...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் யாழ்ப்பாணம் கூட்டுக் கோஷ்டி 23-15 புள்ளிக வட்டுக்கோட்டை பட்டதாரி மாணவர் கோஷ்டியைத் தோற்கடித்தது.

இப்போட்டிகள் யாவும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன. (வி. நி)

## 'கடவுளுக்கு சமமான கணவர் கிடைத்தார், ஆனால்...

### தற்கொலை செய்த இளம்பெண் எழுதிய கடிதம்

அனலைதீவு, வியாழன் "கடவுளுக்குச் சமமான கணவனை எனக்குத் தேடித் தந்தீர்கள். அவர் என்னை அன்பாகவே பாதுகாத்து வந்தாரெனினும், சந்தோஷமாக வாழ எனது சுகவீனம் இடந்தரவில்லை. என்னை மன்னித்துவிடுங்கள் அண்ணா."

இவ்வாறு தமது தமையனுக்குக் கடிதம் எழுதி வைத்துவிட்டுத் தற்கொலை செய்துகொண்டார் மணமான ஓர் இளம் பெண். இப்பரிதாப சம்பவம் அனலைதீவில் நடைபெற்றுள்ளது. நயினாதீவு திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. மருதமுத்து மரண விசாரணை நடத்தினார்.

அனலைதீவைச் சேர்ந்த பசுபதிப்பிள்ளை செல்லம்மா (வயது 20) என்பவரே தற்கொலை செய்துகொண்டவராவார். கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் விவாகம் செய்த இப்பெண், விவாகம் செய்தகாலத்திலிருந்தே உடல் நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்ததாகவும், சம்பவ தினமும் வாந்தி எடுத்ததாகவும், கணவனைச் சோடா வாங்கக் கடைக்கு அனுப்பிவிட்டு நச்சுத்திராவகத்தை அருந்திவிட்டதாகவும் கூறப்பட்டது. சுகவீனமுற்றிருந்தால மனமுடைந்து தற்கொலை செய்திருக்கலாமெனவும் சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டது.

நச்சுத்திராவகத்தை அருந்திவிட்டதாகக் கூறப்பட்ட அச்சமயத்தில் தனிமையாக வீட்டிலிருந்தவரான காலஞ்சென்றவரது தமையன் திரு. க. நடராசா அயல்வீட்டு வாசியான திருமதி சிவரெத்தினம், வ. பசுபதிப்பிள்ளை ஆகியோர் மரண விசாரணையின்போது சாட்சியமளித்தனர். சுகவீனம் காரணமாகத் தற்கொலை செய்துள்ளார் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

## மரண அறிவித்தல்

திரு. வீ. நவரத்தினராசா J. P., U. M. முடிக்குரிய வழக்கறிஞரும் பிரசித்த நொத்தாரிசுவும் (Crown Proctor & Notary Public) காலமாகிவிட்டார். ஈமக்கிரிகைகள் இன்று மாலை 5 மணியளவில் கோண்டாவிலில் நடைபெறும். 1957

ஞானேஸ்வரன் குமாரசாமி [சாட்டர்ட் அக்கவுண்டன்ற்] காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற வி. எஸ். எஸ். குமாரசுவாமி தம்பதிகளின் மகனும், மரகதத்தின் அருமைக் கணவரும், திரு. கோபாலபிள்ளை [சுருவில், ஊர்காவற்றுறை]யின் மருமகனும் ஆவார். அன்னாரது பூதவுடல் இன்று மாலை 3 மணியளவில் 51, பலாலிரோட், கந்தர்மடத்திலுள்ள இல்லத்திலிருந்து கோம்பயன்மணல் மயானத்துக்கு ஈமக்கிரிகைக்காக எடுத்துச்செல்லப்படும். 1958

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு மார்ச் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org